REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 28உ செவ்வாய் (12—7—55) ★ ★ வெளியீடு: ஆனி 29உ புதன் (13—7—55) [இதழ் 24

மழையைப் பெய்விக்க பிராமண சமாராதனை!

சௌராஷ்டிர மாநில இராஜப்பிரமுகரான நவாநகர் ஜாம் சாகேப், ஜாம் நகரில் உள்ள வருணர் (மழைக் கடவுள்) கோவிலில் மிகப் பெரிய விருந்தொன்று நடத்தியிருக்கிறார். அந்த விசேட விருந்தில் 5,000 பேர் கலந்துகொண்டனராம்! வறண்டுபோய்க் கிடக்கும் தங்கள் நிலங்களில் பயிர் செய்ய மழை பொழிய வேண்டுமென்பதற்குக் கடவுளை வேண்டிக்கொள்ளவே இந்த விருந்தாம்!

அன்னதானம் செய்வதுதான் தலைசிறந்த தியாகமென்றும் எனவே அதைச் செய்தால் வருண பகவான் மனமிரங்கி மழையை வருவிப்பார் என்றும் இராஜப்பிரமுகர், அவ்வைபவ விழாவில் பேசியிருக்கிறார்.

இந்தி ஏகாதிபத்தியத்தின் புதிய போர்க்கோலம்

வட நாட்டினர் வயிறு பிழைக்க புதிய வாய்ப்பு

இந்தி கற்பிக்கும் போர்வையில் வடவர் இறக்குமதி!

இந்தி பாடப் புத்தகங்களுக்கும் திராவிடம் சந்தையாகிறது!

புதுடில்லி, ஜூலை 11—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்தி மொழி வழங்கப்படாத மாநிலங்களில் இந்தியைப் பரப்புவதற்காக ஒவ்வொரு உயர்தரப் பள்ளியிலும் குறைந்தபட்சம் ஒரு இந்தி ஆசிரியரையாவது நியமிப்பது என்று இந்திய சர்க்கார் கல்வி இலாகா கருதுகிறதாம். இதற்காக ஆகும் செலவை மத்திய சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் என்றும், இந்த ஏற்பாடு மூலம் இந்தியைப் பரப்புவதில் மிகுந்த ஊக்கமளிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

அனேகமாக, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே எளிய இந்தி இலக்கண நூல் ஒன்றை மத்திய சர்க்கார் கல்வி இலாகா பிரசுரிக்கும் என்றும், இந்தி ஆரம்பப் பாட மாதிரிப் புத்தகங்களையும் வயது வந்தோருக்கான கல்விப் புத்தகங்களையும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் மொத்தமாக வழங்குவதெனவும் கருதுகிறதாம்.

இது தவிர, இந்தி பேசாத பகுதிகளில், வருகிற ஆகஸ்டு மாத நடுப் பகுதியில் அகில இந்திய இந்திப் புத்தகக் கண்காட்சி ஒன்று நடத்துவதற்கு முயற்சிக்கக் கூடுமாம்!

இந்தியை, 'இதமான' முறையில்தான் பரப்பவேண்டுமே தவிர, அதில் நிர்ப்பந்தமோ, அவசரமோ கூடாது என்று இந்திய சர்க்கார் கருதுகிறதாம்; மேலும், பல்கலைக் கழகங்களில் இந்தி மொழியைப் பயிற்றுவிப்பதற்கு சென்னை, வங்காளம் ஆகிய மாநிலப் பல்கலைக் கழகங்கள் தயக்கம் தெரிவிப்பது குறித்து, மத்திய சர்க்கார் முக்கிய கவனம் செலுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்தி மொழியைப் பரப்புவதற்கான பல்வேறு திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் நிதிஉதவி செய்யும் என்றும், ஆனால் இந்தி மொழி பரப்பும் வேலையை மாநில சர்க்கார்களே அமுல் நடத்த வேண்டும் என்றும், தங்கள் இஷ்டப்பட்ட எந்த நிறுவனத்திடமும், மாநில சர்க்கார்கள் மேற்படி பணியை ஒப்படைக்கலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

(மற்ற விபரம் 2-ம் பக்கம் பார்க்க)

பஞ்சத்தின் கொடுமை!

நேபாளத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள சில மாவட்டங்களில் பஞ்சத்தின் காரணமாக பலர் இறக்கும் தருவாயிலிருக்கின்றனராம்!

ஏற்கனவே, பட்டினியின் காரணமாக 9 பெண்கள் உட்பட 29 பேர் இறந்துவிட்டதாகவும், தற்போது அங்கு இரயில் மூலமும், விமான மூலமும் உணவுப் பண்டங்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் சட்டங்கள் திருத்தப்படும்

மக்கள் சபையில் இரு மசோதா கொண்டுவரப்படும்

புதுடில்லி, ஜூலை 11—

இந்தியா முழுமையிலும், சட்ட சபைகளுக்கான தேர்தல்கள் அனைத்தும் ஒரே காலத்தில் நடைபெறுவதற்காகவும், தேர்தல் முறைகளை சுலபமாக்குவதற்குமாக தேர்தல் சட்டங்களில் திருத்தம் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

மேலும் தேர்தலுக்காகும் காலம், செலவு ஆகியவற்றைக் குறைத்தல், தேர்தல் மனுக்களைத் துரிதமாகப் பைசல் செய்வது ஆகியவற்றிற்கென, ஒருவர் அடங்கிய தேர்தல் டிரிபியூனலும் ஏற்படுத்தப்படுமாம்.

அனேகமாக, அடுத்த சட்ட சபைக் கூட்டத்தின்போது, 1950—51-ம் வருடத்திய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டங்களை திருத்துவதற்கென இரண்டு மசோதாக்கள் மக்கள் சபையில் கொண்டு வரப்படலாம் என்று தெரியவருகிறது.

கோபாலர்—சஞ்சீவியார் உட்பகையின் எதிரொலி

தண்ணீர் தீர்வை உயர்வுக்கு ஆந்திர காங்கிரஸ் தலைவர் எதிர்ப்பு

"தற்போதைய நிலையில்—தானிய விலைகள் மிக மிகச் சரிந்து கிடக்கிற நிலையில் சர்க்கார் தண்ணீர் வரி உயர்த்துவது என்பது—குடியானவர்களுக்குச் செய்யும் ஒரு அநீதியேயாகும்; மாநிலத்தில் உற்பத்தித் திட்டங்களை மேலும் மேலும் பெருக்க, தேவையான பணத்திற்காக வரிகளை அதிகப்படுத்துவது வரவேற்கத்தக்கதே என்றாலும், அதை ஏழைகள்மீது திணிக்கக் கூடாது; பெரும் பணக்காரர்களுக்கு அதிக வரியை விதித்து, ஏழை குடியானவர்கள்மீது ஏற்கனவே இருந்துவரும் வரிச்சுமையைக் குறைப்பதுதான் வரவேற்கத் தக்கது—பாராட்டற்குரியது."

—என்று, ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவர் சத்திய நாராயண ராஜு குறிப்பிட்டிருக்கிறார்.

ஆந்திர மாநில சர்க்காரின் வரி விதிப்புப் பிரரேபணைகளுக்கு, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களில் சிலர் நேரடியான எதிர்ப்புகள் தெரிவித்ததை ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"இனங்களை சாதாரண ரயத்து வாரி வரி முறைக்குட்படுத்தினது நியாயம் என்று சட்டசபைக் கட்சிகள் அனைத்தும் வரவேற்றன; ஆனால், தண்ணீர் வரியை மேலும் 25 சதவிகிதம் அதிகரிக்க வேண்டுமென்ற பிரரேபணைக்குப் பலத்த எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன; மேலும், சர்க்காரின் இந்த அதிக வரி விதிப்புப் பிரரேபணையினால் ஏழை மக்கள் மேலும் மேலும் பாதிக்கப்படுபவர்களாக இருப்பதால் சர்க்காரின் இக்கொள்கை, இந்தியக் காங்கிரசின் சோஷலிச மாதிரி சமுதாயக் கொள்கைகளுக்கு முரண்பட்டதாக இருக்கிறது," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சத்தியநாராயண ராஜுவைப் போலவே, மாநில கம்யூனிஸ்டுகளும், ம. சோ.-க்களும் இந்த எதிர்ப்பினை ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது.

★

ஆந்திரா எதிர்க்காதாம்!

"விசால ஆந்திரம் அமைக்கப்பட்டால், ஹைதராபாத் மன்னர், ஹைசாம் மாநிலத்தின் இராஜப் பிரமுகராக இருப்பதை ஆந்திர சர்க்கார் எதிர்க்காது" என்று ஆந்திர முதலமைச்சர் கோபால் ரெட்டி ஆந்திர சட்ட சபையில், வரவு—செலவுத் திட்ட விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

ஆங்கில மொழிக்கு ஆரிய கலாசார வெறியரின் வக்காலத்து!

அதே வாயால் வட மொழிக்கும் வாழ்வு பெற முயலுகிறார் முன்ஷி!

பம்பாய், ஜூலை 8—

"உலகப் பொது மொழியான ஆங்கிலத்தில் இந்தியர்கள் அனைவரும் மிக்க தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்; அந்த மொழியை நாம் நமக்குத் தேவையான அளவிற்கு குற்றமறத் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்."

இவ்வாறு, உத்திர பிரதேச கவர்னர் கே. எம். முன்ஷி, மாணவர்களடங்கிய கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

"நாம் ஆங்கிலத்தை விரட்டி விட்டு, அந்த இடத்தில் இந்தியைப் புகுத்த வேண்டுமென விரும்புகிறோம்; ஆனாலும் நாம் ஆங்கிலத்தை நன்கு கற்றிருக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம்;

"ஆங்கிலத்தை நமது நாட்டை விட்டு விரட்டுகிறதாக இருந்தால், அகில உலக விவகாரங்களைப் பொறுத்தவரையில் நமது நடவடிக்கைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி, அவைகளை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நிறுத்திக்கொள்ள வேண்டியது தான்,"

என்றும் அவர் பேசியிருக்கிறார்.

மேலும் அவர், சமஸ்கிருத மொழி மிகத் தொன்மை வாய்ந்தது(!) என்றும், இந்தியரின் கலாச்சார மொழி சமஸ்கிருதம் என்றும், இந்தியா முழுமைக்கும் உள்ள இதர மொழிகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தும் மொழி சமஸ்கிருத மொழியே என்றும் குறிப்பிட்டார்.

மேலும், 'தற்போதைய உலகில் இந்தியாவின் நிலை உயருவதற்குக் காரணம் இந்தியாவின் கலாச்சாரமே(?)' என்றும் கூறியிருக்கிறார்.

பனம்பள்ளியின் பதவிக்கு மண்டை இடி!

தொழிற் சங்கப் பாதுகாப்பு நாள் அனுசரிக்க ஏற்பாடு!

நம்பிக்கையின்மை தீர்மானம் கொண்டுவரவும் முடிவு

திரு—கொச்சி காங்கிரஸ் மந்திரி சபைக்கு எதிராக எதிர்ப்பு புகைந்துகொண்டு இருக்கிறது.

பனம்பள்ளி மந்திரி சபை, தொழிற்சங்க விவகாரத்தில், இந்திய தேசிய தொழிற் சங்கத்திற்குச் சலுகையும், மற்றத் தொழிற் சங்கங்களுக்கு எதிர்ப்பையும் காட்டி வருவதாகப் புகார் கூறப்படுகிறது.

அதையே அடிப்படையாகக் கொண்டு, சட்டசபையின் அடுத்தக் கூட்டத்தில் மந்திரி சபை மீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை கொண்டுவரப் போவதாக புரட்சிகர சோஷலிஸ்டு கட்சி அறிவித்திருக்கிறது.

அத்தீர்மானத்திற்கு கம்யூனிஸ்டு கட்சியினரின் பேராதரவும் இருந்து வருகிறது.

ம. சோ. கட்சியினரும் மேற்படி தீர்மானத்தை ஆதரிக்கக்கூடும் என எதிர்பார்ப்பதால், ஏமாற்றம் ஏற்பட நியாயமில்லை.

தி. த. நா. காங்கிரஸ் உறுப்பினர்களின் போக்கு நிச்சயமற்று இருந்த போதிலும், காங்கிரஸ் மந்திரி சபைக்குத்தான் அவர்கள் ஆதரவு கட்டாயம் இருந்துதீரும் என்பதற்கு, அரசியல் காரணங்கள் ஏராளமாக இருந்துவருகின்றன.

வருகிற ஜூலை மாதம் 18-ந் தேதியை, 'தொழிற் சங்க பாதுகாப்பு' நாளாகக் கொண்டாடும்படி கொல்லத்தில் கூடிய தொழிற் சங்கக் காங்கிரஸ் பிரதிநிதிகளும், ஐக்கியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் பிரதிநிதிகளும் தீர்மானித்துள்ளனர்.

மேற்படி கூட்டத்தில் இந்து மஸ்தூர் சபையின் சார்பில், ம. சோ. கட்சியைச் சேர்ந்த பிரதிநிதி கலந்து கொண்டிருந்தபோதிலும், தீர்மானத்திற்கு எதிராகவோ சாதகமாகவோ கருத்தறிவிக்காமல், வெறும் பார்வையாளராக இருந்திருக்கிறார்.

உத்தியோக நியமன தேர்தல் குழுவில்.....

சென்னை சட்டசபைத் தலைவருக்கு உறுப்பினர் பதவி?

'யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷ'னுக்கு, அரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவரை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்வது என்று, இந்திய சர்க்கார் உள்நாட்டிலாகா முடிவு செய்துள்ளதாம்; இதன்படி, அனேகமாக சென்னை சட்டசபை சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

செவ்வாய் கிரகத்திலும் பூமியைப் போலவே மரஞ்செடிகள் இருப்பதாக சோவியத் விஞ்ஞானிகள் நிரூபித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 12—7—'55 செவ்வாய்

பால் ஊற்றினர்!

முருகன் இடத்தில் முத்தாயி ஒரு உபகாரத்தை எதிர்பார்க்கிறாள். 'முருகனாவது, உபகாரம் செய்வதாவது?' என, முத்தாயிக்கு நெருக்கமானவர்கள், தங்கள் இயல்புப்படி, அவளுடைய அவநம்பிக்கையைத் தூண்டுகிறார்கள். இருந்தாலும் அவள் எதிர்பார்த்த உதவியை மனமுவந்து முருகன் செய்துவிடுகிறான். 'முருகன் உதவமாட்டான்' என்ற அவநம்பிக்கையுடன் இருந்த முத்தாயிக்கு அவனிடமிருந்து உதவி எதிர்பாராத வகையில் கிடைத்துவிடவே, "முருகன் 'பாலை ஊற்றினன்' என் வயிற்றில்" என்று மகிழ்ச்சி மேலீட்டால் கூறுகிறாள்!

அத்தகைய பாலை ஊற்றிடும் செய்தியை அல்ல நாம் இப்பொழுது குறிப்பிட இருப்பது!

★

தன் மகன் கந்தன், கல்லூரிப் பட்டப் பரீட்சையில், தேறுவானோ மாட்டானோ எனப் பெருங்கவலை கொண்டிருந்தாள் காமாட்சி. முடிவு தெரிகிற வரையில் அவளுக்கு உறக்கம் வந்ததில்லை—உண்ணப் பிடித்ததில்லை. ஆனால் முடிவு தெரிந்ததும், "நான் பெற்றெடுத்த மகன் கந்தன்—என் வயிற்றில் 'பாலை ஊற்றினன்'" எனப் பூரிப்புடன் புகல்கிறாள் தாய்! அத்தகு பால் ஊற்றிடும் சம்பவத்தைப் போன்றதல்ல நாம் எடுத்துக்காட்ட இருப்பது!

★

நாம் கூற இருக்கும் பால் ஊற்றும் விஷயம், வேதனை நிரம்பியது! துக்கமூட்டக் கூடியது! துன்பமளிக்கத்தக்கது! வெட்கத்தால் தலையைத் தரை நோக்கிட வைத்திடக் கூடியது! அறிவை அழிக்கும்; மடமையை வளர்க்கும்! மக்களை, மாக்கள் நிலைக்குத் தாழ்த்திச் செல்லும் கொடும் ஆற்றல் கொண்டு விளங்குவது!

பாம்புக்குப் பாலூற்றினால், பதிலுக்கு, என்றைக்காவது ஒரு நாளைக்கு, உயிரைக் குடிக்கக்கூடிய கொடு நஞ்சைத்தானே பரிசாகப் பெற முடியும்? அதைத்தானே, பிரதிபலனாக நல்லரவத்திடம் நாம் எதிர்பார்க்க முடியும்?

அதனாலன்றோ பாம்பு சிறியதாக இருந்தாலும், பெருந்தடி கொண்டு அதைப் புடைக்க வேண்டுமென்றொரு மூதுரை ஏற்பட்டிருக்கிறது?

★

மரம் நடும் விழாவில், கருத்து கால்—கபடம் முக்கால் கலந்து

உள்ளது ஆறுதல்
உண்ணவும் சில
'அற்ப விஷயம்,
றில் உயரப் பறந்
வம் பஞ்சு' என்
இலேசாக மதித்துக்
ன்றே! மாங்கன்
யரசுத் தலைவர் பால்
னாட்டியாவது, அம்
ர்சங்களுக்குத் தெளி
வண்டும்; அறிவைத்
வ வேண்டும்!

சாலையோரங்களில் தக்கச் செடிகளை வைத்துப் பாதுகாத்து, நிழலும் பலனும் ஒருங்கே தரும் மரமாக்கச் செய்வது நல்லது— மக்களுக்குத் தேவையானதும் கூட. இதுவே செடி நட்டு மரமாக்கு வதில் மறைந்து கிடக்கும் சிறப்பு.

இந்த அளவோடு செடி நடும் பணி கட்டுப்படுத்தப்பட்டிருந்தால், அதைக் கண்டிக்க—கேலி பேச கருத்துடையோர் முனைந்திருக்கப் போவதுகிடையாது.

எல்லாவற்றையும் பகட்டிற்கும், தங்கள் விளம்பர வேட்டைக்கும் பயன்படுத்திக் கொண்டு வருவதுபோலவே, காங்கிரஸ் ஆளவந்தார்கள், மரம் நடும் விஷயத்தையும் பயன்படுத்திக் கொண்டுவருவதால், நம்போன்றோரிடமிருந்து கேலி கிளம்ப இடமேற்பட்டது; கண்டனம் கூறிடக் கட்டாயம் ஏற்பட்டது.

ஆசிரியர், கிழிந்த ஆடையைத் தைத்திட, ஊசி கேட்டார்; சீடர்கள் நால்வர் ஊசி வாங்கச் சென்றனர்; வாங்கிய சிறு ஊசியை, ஒரு பெரும் பனைமரத் துண்டில் குத்தி, நால்வரும் தூக்கிக் கொண்டுவந்து ஆசிரியர் முன் போட்டனர்; பனைமரத் துண்டமட்டும் தரையில் கிடந்தது—அதுவோ, ஆசிரியர் விரும்பாதது—வேண்டாதது! ஆசிரியர் விரும்பிக் கோரிய சிறு ஊசி கிடைக்கவில்லை! சீடர்களால் ஆசிரியருக்குக் கிடைத்தது, ஏமாற்றம்—பெரும் ஏமாற்றம்!

செடி நடுவது, ஊசிபோன்ற முக்கியத்துவம் வாய்ந்தது! தங்களுக்குள்ள ஆசிரியர் பற்றைக் காட்டிக் கொள்வதற்காகவே சீடர்கள் தூக்கிவந்த பனை மரத் துண்டைப் போன்றது—செடி நடுவதைத் தங்கள் விளம்பரத்திற்காக, காங்கிரஸ் அமைச்சர்கள் பயன்படுத்திக் கொண்டு வருவது!

சாலையோரங்களில் செடி நட்டு மரமாக்கியது அசோகனுக்குப் புகழ் பரப்பி இருக்கிறது. அப்பணியினால், ஹர்ஷ சக்ரவர்த்திக்குக்கூட சிறப்பு ஏற்பட்டிருப்பதாக ஏடு சொல்லுகிறது. அக்பரும் அவ்வழி சென்று புகழ் பெற்றிருக்கிறார்.

ஆங்கிலேயர் ஆட்சியில், அப்பணியினைக் கண்காணித்து வரவும், மரங்களைக் காத்து வரவும் தனித் துறையே பணியாற்றி வந்திருக்கிறது. இப்பொழுதும் அத்துறை இருக்கத்தான் இருந்து வருகிறது.

செடி வைத்துப் பயிரிடுவதை வல்லபாய் படேல்—ஒரு பெரிய கவி!

சில மாணவர்கள், 'கௌசல்யா' 'குந்தி' என்ற பெயர்களைக்கூட கேட்டதில்லையாம்!

மிளகாய் வற்றல் சாகுபடி

நடப்பு ஆண்டில், 14,72,000 ஏக்கராவில் மிளகாய் வற்றல் சாகுபடி செய்யப்பட்டு, 8,56,000 டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதென்று தெரியவருகுறது.

புதுடில்லியில் உள்ள குடியரசுத் தலைவரின் அரண்மனைத் தோட்டத்தில், வழக்கம்போல், இவ்வாண்டும் அப்படாடோபமான செடி நடும் பணி நடைபெற்று இருக்கிறது. குடியரசுத் தலைவர், ஒரு மாங்கன்றை நட்டு இருக்கிறார்!

மாளிகையில் செடி நடு விழா கொண்டாடினதிலோ, குடியரசுத் தலைவர் ஒரு மாங்கன்றை நட்டதிலோ குற்றமில்லை—குணம் இருந்திடவும்தான் செய்கிறது!

ஆனால், மாங்கன்று நட்ட தலைவர்,—மாங்கன்றுக்கு மட்டுமல்ல, எந்த ஒரு செடியும் வளர்வதற்கு நல்ல நீரைத் தானே ஊற்றி இருக்க வேண்டும்—நீர்தான் ஊற்றி இருப்பார் என்றுதானே, நாம் ஒவ்வொருவரும் நம்புவோம்.

அவரென்ன சாமானியரா, நம் போன்ற சாதாரண மக்கள் செடி நட்டுத் தண்ணீர் ஊற்றுவதுபோல, அவரும் தண்ணீர் ஊற்றுவதற்கு? அவர் குடியரசுத் தலைவர் ஆயிற்றே, அதற்காகவாவது, ஒரு மாற்றம் இருக்க வேண்டாமா?

தாம் வைத்த மாங்கன்றுக்கு நீர் ஊற்றுவதற்குப் பதிலாக, பால் ஊற்றினர், குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்!

குனிந்தபடி நின்றுகொண்டு செடிக்கு தண்ணீர் ஊற்றுவானே தோட்டக்காரன், அதுபோல, குடியரசு தலைவர், தாம் நட்ட மாங்கன்றுக்கு நீர் ஊற்றினதாக எவரும் எண்ணிவிடக் கூடாது.

பரம்பரை கெட்டுவிடாமல், பந்தியில் விருந்துண்ணும் போது உட்காருவதைப்போல உட்கார்ந்து, குடியரசு தலைவர் மாங்கன்றுக்கு நீர் ஊற்றுவதற்குப் பதிலாக, பால் ஊற்றுகிறார்!

இக்காட்சியைப் படமாக்கித் தந்திருக்கிறது, சென்னை 'மெயில்' இதழ்!

குடியரசுத் தலைவருக்கு முன்னால் தட்டு ஒன்று கிடக்கிறது! அதில் ஏதோ ஒரு பொருள் சிதைந்து காணப்படுகிறது! மஞ்சள், பச்சரிசி—இல்லை—அட்சதையாக இருந்தாலும் இருக்கக்கூடும்! எதிரிலே ஒருவர் தலைப்பாகையுடன், தனது இரு கைகளையும் குடியரசுத் தலைவர் பக்கமாக நீட்டிக் கொண்டு, வாய் பிளந்தவண்ணம் மாங்கன்றுக்குப் பால் ஊற்றும் காட்சியைக் கண் மூடாமல் கவனித்துக்கொண்டு இருக்கிறார்!

அம் மாங்கன்றுக்கு, ஒரு நாளைக்குமட்டுந்தான் பால் ஊற்றப்பட்டதோ, அல்லது இனியும் தொடர்ந்து தினம் தினம், பால் ஊற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ, யார் கண்டார்கள்!

மாங்கன்றுக்கு பால் ஊற்றுவது, முதல்தரமான வைதிகச் சடங்காகும்!

பாமர மக்கள், தங்கள் பக்தியின் காரணமாக, கோயிலில் இருந்துவரும் ஆயிரக்கணக்கான கற்சிலைகளுக்குப் பாலை ஊற்றிப் பரவசப்படுகின்றனர்! புரோகிதர் வகுத்த வழி கிடக்கிறது!

மரம் நடும் பணியில், நான்கில் ஒருபங்கு பலனும், மூன்று பங்கு பகட்டும் பொதிந்து கிடக்கிறது!

ஆண்டுக்கொருமுறை, மரம் நடும் அலங்கோலம், குட்டி அமைச்சர்களுக்கும் பெரிய மந்திரிகளுக்கும், விளம்பரத்தைத் தேடிக்கொள்ளும் ஒரு அரிய வாய்ப்பாக அமைந்து கிடக்கிறது!

இடைநிலைப் பள்ளிகளில் இந்தி கட்டாய பாடமாகும்

3 கட்டங்களாக 15 ஆண்டுகளில் அமுல் நடத்த ஏற்பாடு

நிர்வாகத் துறையில் ஆங்கிலத்துடன் இந்தியும் 3-வது கட்டத்தில் புகுத்தப்படும்

மத்திய சர்க்கார் கல்வித் துறை திட்டம்

"இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, மத்திய சர்க்காரில் அரசாங்க மொழியாக இந்தியை கொள்வதற்கு, கல்வி இலாகா திட்டமொன்று தயாரித்துள்ளது. ஆங்கிலத்திற்குப் பதில், இந்தி அரசாங்க மொழியாகும்.

இத்திட்டம் நிறைவேற்ற இரண்டு முக்கிய வழிகளைக் கையாளவேண்டும். விஞ்ஞானம், தொழில் விடய நுட்பங்களுக்கும் நிர்வாகத் துறையில் இந்தி வார்த்தைகள் தயாரிக்கப்பட வேண்டும்; இந்தி தாய்மொழி அல்லாத பிரதேசங்களில் இந்தியைப் பரப்பவேண்டும்.

இத்திட்டம் மூன்று கட்டங்களில் (ஒவ்வொன்றிற்கும் 5 ஆண்டு காலம் குறிப்பிட்டுள்ளது) நிறைவேற்றப்படும்.

முதல் கட்டம்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தி கலைச் சொற்கள் தயாரிக்கப்படும்; இந்தி பேசாத பிரதேசங்களில் இடைநிலைப் பள்ளிகளில் இந்தி கட்டாய பாடமாக்கப்படும்; மக்களிடையேயும் இது பரப்பப்படும்.

இந்தி கலைச் சொற்கள் தயாரிக்கும் அலுவல் இக்காலத்திற்குள்ளேயே பெரும்பாலும் முடிந்துவிடும்.

2-வது கட்டம்

இந்தி கலைச் சொற்கள் தொகுப்பு வேலை இரண்டாவது கட்டத்தில் பூர்த்தியாகிவிடும். இக்காலத்தில் இந்தி வழங்காத பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் இந்திமொழி அறிவைப் பெற்றிருப்பார்கள். முதியோர்கள் கற்றுக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்படும்.

3-வது கட்டம்

இவ்வாறு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின் ஆங்கிலத்துடன் சேர்ந்து இந்தி, மத்திய சர்க்கார் நிர்வாக அலுவல்களில் புகுத்தப்படும். மத்திய, மாநில சர்க்கார்களின் கடிதப் போக்குவரத்தும் இந்தியில் நடைபெறும்.

இவ்வாறு நிர்வாக மொழியாக 5 ஆண்டுகளில் இந்தி அபிவிருத்தியடைந்ததும், அதிலுள்ள கஷ்டங்களையும், குறைகளையும் தெரிந்துகொண்டு அவற்றை நீக்க சந்தர்ப்பம் ஏற்படும்.

இந்தி மொழியைப் பரப்புவதற்கு பல்வேறு நிறுவனங்களுக்கும், கழகங்களுக்கும், மானியங்கள் சர்க்காரால் வழங்கப்பட்டுள்ளன. பல்கலைக் கழகத்தில் போதனை மொழி பற்றி பல்கலைக் கழக மான்யக் குழுவின் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

வடநாட்டு தொழிற்சாலை வளர்ச்சிக்குத் திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சித்தரஞ்சன் இரயில் என்ஜின் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 300 என்ஜின்கள் தயாரிக்கப்படுமென்றும், திட்டம் முடிவடையக் கூடிய தருவாயில், அத்தொழிற்சாலை, ஆண்டொன்றில் 400 என்ஜின்கள் வீதம் உற்பத்தி செய்யக் கூடிய நிலையிலிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மேலும், ரூ. 1500 கோடி மதிப்புடைய இரயிலை அபிவிருத்திக்கான இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் திட்டக் குழுவினிடம் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

இன்னும் ஒரு ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே, பழைய இரயில் என்ஜின்களுக்குப் பதிலாகப் புதிய என்ஜின்களை சித்தரஞ்சன் தொழிற்சாலையிலிருந்தே கிடைக்கும்படி செய்துவிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் திறமை பற்றி கே. எம். முன்ஷி

"முன்னர் நடைபெற்றவைகளைப் பற்றியோ, தற்போது நடைபெறுபவைகளைப் பற்றியோ இக்கால மாணவர்களுக்கு எதுவுமே தெரியவில்லை; அவர்களின் அறியாமைக்கு சில உதாரணங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்."

என்று, பம்பாய் பல்கலைக்கழகம் ஒன்றில், கே. எம். முன்ஷி கூறிவிட்டு பப்ளிக் சர்வீஸ்கமிஷன் முன் ஆஜரான சில மாணவர்கள், கமிஷனின் சில கேள்விகளுக்கு அவர்கள் அளித்த விசித்திரமான பதில்களைக் குறிப்பிட்டார். அது வருமாறு:—

அசோகன்—ஒரு திரைப்பட நடிகர்!

நேரு—இந்தியாவின் பெரிய வேலைக்காரர் (?)

மாட்சிமை தங்கிய குடியரசுத் தலைவரால்!

பாமர மக்களால், கற்சிலைகளின் தலைகளில் பால் கொட்டப்படுகிறது!

இரண்டையும் செய்கிறவர் களிடையில் அந்தஸ்தில்தான் வேற்றுமை இருந்திடக் காணகிறோமேயல்லாது, அடிப்படை கருத்தில் வேற்றுமை இருந்திடக் காணவில்லை!

அறிவு வளர்ச்சிக்கு, விஞ்ஞானக் கண்ணோட்டப் பெருக்கத்திற்கு, பாமர மக்கள் எந்த அளவு பயன்படுவார்களோ, அதே அளவில்தான், குடியரசுத் தலைவரும் பயன்படுபவராக இருப்பது பரிதாபத்துக்குரியதாகும்! அவரோ சட்ட நிபுணர், ஆங்கிலக் கல்வி கற்றுள்ள மேதை; அவர் செயல் இப்படி இருக்கிறது!

அறியாமையே! வைதீகக் கொடுமையே! சனாதனச் தங்கள் புகழுக்கு வாய்த்த வண்ணம் யாக்கிட, ஆங்கில துரைத்தனம் நினைத்ததுமில்லை — நடைமுறையில் மேற்கொண்டதுமில்லை. ஆனால் நமது காங்கிரஸ் ஆளவந்தார்களோ, எதையும் விளம்பரத்திற்கு உபயோகித்துக் கொள்வதுபோன்றே, இத்திருப்பணியையும், ஒவ்வொரு ஆண்டும், தங்கள் சொந்த விளம்பரத்திற்கு உள்ளாக்கி வருகின்றனர்.

அது!

பால் பஞ்சம், இந்தியத் துணைக்கண்டத்தில் மிகமிகச் சாதாரணம்.

பால், கொக்கின் கழுத்துப் போல் நீண்டு வளைந்திருக்கும் என்று, பாலைப் பற்றிய அறிவு படைத்தவர்களும் நம் நாட்டில் உண்டு!

குழந்தைகளுக்குப் பால் கிடைக்கவில்லை! மாங்கன்றுக்குப் பால் ஊற்றப்படுகிறது,

சு ஆறுதல்!
மேதைகள்
ஆடிக் கா
திடும் இ
நெல்லை
கிடக்கின்ற
புக்கு, குடி
ஊற்றும்
மேதா வில
வைத் தா
துவக்க உ

'வரி'களை திணிக்கும் ஆட்சியில் 'வறுமை' தாண்டவமாடுகிறது!

'தென்னாடு—வட நாடு' எனும் பேதம் சைவ, வைஷ்ணவத்திலும் உண்டு!

கரூர் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் எடுத்துக்காட்டு

"'பிரனீஸ் மலை உச்சிப் பகுதியில், அந்தோரா என்ற சிறிய நாடு இருந்துவருகிறது; பனி பெய்ய ஆரம்பித்துவிட்டாலோ, மக்கள் ஏறி இறங்கவே முடியாது; அப்படிப்பட்ட நாடு—5,500 மக்களை மட்டுமே கொண்ட அந்தோரா—சுதந்திர நாடாக வாழ்கிறது; பல நூற்றாண்டுகளாக, யுத்தம்—இயற்கை மாற்றம் போன்றவைகளால் அதன் ஆட்சியை மாற்ற முடியவில்லை; அந்நாட்டில் பிரான்சு, ஸ்பெயின், ஸ்விடன் என்ற மூன்று வகை மக்கள் வாழ்கின்றனர்; அம்மூன்று வகை மக்களும் கூட்டாட்சி நடத்திவருகின்றனர்—அங்கு சிகரெட்டுக்கு வரி கிடையாது,' என்று, 'சுதேசமித்திரன்' ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

"ஆனால், இங்கோ, ஆண்டிற்கு ஆண்டு விஷம்போல் வரி ஏறுகிறது. 36 கோடி மக்களை வைத்துக்கொண்டு நிறைய வரி போடுகிறது அரசாங்கம். அப்படி வரி போட்டும்கூட, பஞ்சம், பட்டினி, வறுமை தாண்டவமாடுகிறது; இங்கு, மனைவி மக்களுக்கு விஷம் கொடுத்துவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்ளும் நிலையில் மனிதன் இருக்கிறான்; ஆனால், அந்தோராவில் பஞ்சம், பட்டினி, வறுமை கிடையாது;

"எனவேதான், நாமும் கேட்கிறோம்—'அந்தோரா வாழும்பொழுது ஏன் திராவிட நாடு வாழாது?'—என்று! அந்நாட்டை 6 பேர் கொண்ட போலீஸ் குழு ஆளுகிறது; அதில் 5 பேர் போலீஸ்காரர்கள்; ஒருவர் இன்ஸ்பெக்டர்!

"'திராவிட நாடு பிரிந்தால் இந்தியா பலவீனமாகிவிடும்,'—என்று சொத்தை வாதம் புரிகின்றனர். அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய மூன்று பெரிய நாடுகளுக்கு அருகில் உள்ள அந்தச் சிறிய நாடு—அந்தோரா வாழும்போது, நாம் வாழ முடியாதா?"

—இவ்வாறு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கரூரில் நடைபெற்ற வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டார். (பொதுச்செயலாளர் சொற்பொழிவின் முற்பகுதி 9–7–55 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மற்ற பகுதி இங்கு தரப்படுகிறது.)

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற வள்ளுவர் கருத்தின்படி, யார் பேசினாலும், அவர்தம் பேச்சில் உள்ள நல்ல கருத்துக்களை சிந்தித்து, ஏற்றுக்கொள்ளவேண்டும். மாற்றுக் கட்சியினரும், சின்னது பெரிசுகளும், சந்துபொந்துகளிலே பேசுகின்றனர்; அவர்களது பழிச் சொல்லையும், இழி சொல்லையும், ஏசலையும் வளரும் பயிருக்கு எரு இடுதல்போல—வளரும் நமது கழகத்திற்கு எருவாக இட்டு கழகத்தை வளர்ப்போம். மாற்றுக் கட்சியினர் நம்மைப் பார்த்து ஏசினால், அதனால் நமக்கு சுரணை ஏற்பட்டு உணர்ச்சி, ஊக்கம் உண்டாகும்; கழகமும் வளரும்; பொது மக்களும், நம்முடைய பேச்சையும், அவர்களுடைய பேச்சையும் கேட்டு சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க முடியும்.

"நம்முடைய வளர்ச்சியைக் கண்டு பொறாமையுற்று, கழகத்தை அழித்துவிட மக்களை ஏவிவிட்டு, இடைஞ்சல்களையும், இல்லாத பொல்லாத செயல்களையும் செய்து வருகின்றனர் காந்தியவாதிகள்—அகிம்சையின் பெயரால்—காந்தியத்தின் பெயரால்—'இராம ராஜ்யத்'தின் பெயரால்!

"கஸ்தூரி ரெங்கசாமி, கல்கி, வா. வே. சு அய்யர், ஆச்சாரியார் போன்ற அத்தனைபேரும் முயன்று பார்த்தனர்—கழகத்தை அழிக்க; ஒருவராலும் முடியவில்லை!

"இவற்றிற்கெல்லாம் காரணம் நமது கொள்கை, ஏறுத உள்ளங்களில் எல்லாம் ஏறுகிறது. பொதுச்செயலாளர் என்ற முறையில் அறிவிக்கிறேன்—800 பார்ப்பனர்கள் தங்களது பட்டத்தைவிட்டு—கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் கழகத்தில் சேர்ந்துள்ளனர். காஞ்சிபுரத்தில் 'பார்ப்பன ஓட்டல் தொழிலாளர் கழகம்,' இப்போது 'திராவிட தொழிலாளர் கழக'மாக மாற்றப்பட்டுவிட்டது. இவ்வாறாகக் கடந்த 25 ஆண்டு காலமாக நாம் எதிர்ப்புகளிடையே வளர்ந்தும், வளர்ந்துகொண்டும் வருகிறோம்.

"தென்னாட்டுக் கோயில்களுக்கு இருக்கின்ற கலை அழகு, வடநாட்டுக் கோயில்களில் இல்லை; சாப்பாட்டுக் கலையிலும் சிறந்தவன் தென்னாட்டுக்காரன்தான்; சாப்பாட்டை நல்ல ருசியோடு சாப்பிடுபவன் தென்னாட்டுக்காரன்; வடவரோ, கோதுமை ரொட்டியை உணவாகக் கொள்ளும் தன்மை உடையவர்; எந்த வகையில், அவர்கள் தென்னாட்டவரோடு ஒப்பிடக் கூடியவர்கள்?

"'தென்னாடு உடைய சிவனே போற்றி' என்றுதான் சிவனடியார்களும் கூறுகின்றனர்; 'விஷ்ணு கூட வடநாடு நோக்குவதில்லை,' என்று வைஷ்ணவர்களும் கூறுகின்றனர். 'வடக்கு நோக்கித் தலை வைத்துப் படுக்காதே' என்றும், 'வாடை என்றால் கதவைச் சாத்து' என்றும் காங்கிரஸ்காரர்களும் கூடக் கூறுகின்றனர்! இவ்வாறு இயற்கையே ஒத்துவருகிறது—வடநாடு, தென்னாடு வேறு என்று சொல்ல! இந்தியாவைதென்னிந்தியா, வடஇந்தியா என்று காங்கிரஸ் தோழர்களே பிரிக்கின்றனர்.

"'சுத்தத்திலும் தென்னவர்கள்தான் சிறந்தவர்கள்; வடவர் 30 அல்லது 40 நாட்களுக்கு குளிக்கவே மாட்டார்களாம்!

"'ஒரு ஆடு மிகவும் அசுத்தமாக இருந்தது; அதனை அவிழ்க்கும் முயற்சியை சொந்தக்காரன் கைவிட்டுவிடவே, வெள்ளையன்—தமிழன்—வடவன் ஆகிய மூன்று பேரும் அந்த வேலையில் ஈடுபகின்றனர்; வெள்ளையன் — ஆட்டை அவிழ்க்கும் முயற்சியில், ஆட்டிற்கு சிறிது தொலைவிலேயே நாற்றம் சகியாமல் திரும்பிவிட்டான்; அடுத்துத் தமிழன் — அதற்குச் சிறிது தொலைவிலேயே நாற்றம் சகியாமல் திரும்பிவிட்டான்; ஆனால், வடவன் அவிழ்க்கச் செல்லும்பொழுதோ ஆடு, தன்னைக் கட்டியிருந்த கயிற்றையும் அறுத்துக்கொண்டு ஓடிவிட்டது — அவனது நாற்றத்தைப் பொறுக்காமல்' என்று பழங்கதை ஒன்றுண்டு — வடவரின் சுத்தத்தைப் பற்றிக் கூற!

"காந்தியார் அகில இந்திய மக்கள் உள்ளத்தில் பதிந்திருந்தார்; அவரது கொள்கையில், மக்கள், பற்றும் பாசமும் கொண்டனர்; ஆனால் இன்றோ, காங்கிரஸ்காரர்கள் அவரை நினைப்பது இரண்டே நாட்களில்! ஒன்று—அவரது பிறந்த நாள்; மற்றொன்று—அவரது மறைவு நாள்!

"அடுத்து படேல்—'அகில இந்தியா' ஒன்றாக இணைவதற்கு உதவியாக இருந்தவர். அவருடைய நினைவு காங்கிரஸ்காரர்களிடையே இன்று கிடையவே கிடையாது! இப்படியிருக்கும்போது நேருவிற்குப் பின், 'அகில இந்திய' எண்ணம் எப்படித் தோன்றும்? இன்று, 'நேரு' என்ற பந்தம், 'பாசம்' என்ற வகையில் இணைந்து இருந்து வருகிறது—அவ்வளவுதான்!

"எந்த ஆச்சாரியார், கட்டாய இந்தியை எதிர்த்து பெரியார் பெல்லாரி சிறையிலே வாடி 15 பவுண்டுகள் எடையில் குறைந்தார் என்று அறிவித்தபொழுது, 'ஒரு மனிதனுக்கு அவ்வளவு பவுண்டு எடை இருந்தால் போதும்' என்று மிடுக்காக அன்று பதில் அளித்தாரோ—'கட்டாயமாக முதல் படிவம் முதல் மூன்றாம் படிவம் வரையில் இந்தியை புகுத்துவேன்' என்றாரோ, அதே ஆச்சாரியார், 15 ஆண்டுகளுக்குப்பின், இன்று, 'இந்தியை கட்டாயமாகப் புகுத்தக் கூடாது; ஏக பாஷை வெறியர்களுக்கு பயித்தியம் இவ்வளவு அவசரமாகவா பிடிக்கவேண்டும்? இந்தி, இந்தி, என்கிறார்களே—எந்த இந்தி?—இந்தி, தமிழுக்கும் வங்காளத்திற்கும், மலையாளத்திற்கும் ஈடாகாது; இலக்கிய, இலக்கண வளமற்றது,'—என்று எழுதியுள்ளார்!

தமிழ் மொழி — இலக்கிய இலக்கணச் செறிவு உடையது; அதே நேரத்தில், இந்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பந்தோ, இந்திக்கு, சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்குமாறு கூறுகிறார்; நொண்டிக் காலனே ஓடும்பொழுது ஏன் நல்ல கால் உடையவன் ஓடக்கூடாது? சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்கும் இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவதானால், இலக்கண இலக்கிய வளம்பெற்ற—பிற மொழிகளிலிருந்து கடன் வாங்க அவசியமற்ற தமிழ்மொழியை ஏன் ஆட்சி மொழியாக்கக்கூடாது? தமிழ் நாட்டிலே உள்ள நீதிமன்றங்களில் ஏன் தமிழ் வழங்கக்கூடாது?

"திருச்சி மாவட்டத்தில் தமிழ் ஆட்சி மொழியாக உள்ளது; அங்கு மொழித் தகராறு உண்டாகிறது என்றால், அங்கு நல்ல தமிழ் அறிஞர்களை நியமித்தால் ஆட்சி ஒழுங்காக நடைபெறாதா? பாஸ்கரத் தொண்டைமான் நல்ல தமிழ் அறிவும், ஆங்கில அறிவும் உடையவர்; அவரை கலெக்டராக நியமித்துப் பார்க்கட்டும்—நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகின்றது என்று! சில சர்க்கார் ஊழியர்களே தங்கள் குழந்தைகளிடம் தமிழ் கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர்!

"விஞ்ஞானத்தை அறிய தமிழ் பயன்படவில்லை; உலக வாணிபம், உலகத் தொடர்பு கொள்ளத் தமிழ் பயன்படாது; ஆனால், 'இந்தி மட்டும் பயன்படுமா?' என்றால், இல்லை; உலகத் தொடர்பு கொள்ள அகில உலகப் பொது மொழியான ஆங்கிலம் தேவை; நமக்கு ஆங்கிலமும் — தமிழும் தேவை; வடவனுக்கு, இந்தியும், ஆங்கிலமும் தேவை; தென்னாட்டில் உள்ள பெரிய வியாபாரி வடநாட்டுடன் வியாபாரம் செய்ய இந்தி தேவை; வடநாட்டில் உள்ள பெரிய வியாபாரி வேறு நாட்டுடன் வியாபாரம் செய்ய ஆங்கிலம் தேவை.

"நாம் இந்தி படிப்பதால் நமக்கு எந்த வகையில் இலாபம்? எந்த வகையில் அது பயன்படும்? அவசியம் உள்ளவர்கள் ஆங்கிலம் படித்தால் போதும்; தனிப்பட்டவர்கள் வேண்டுமானால் எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் படிக்கட்டும்.

"நாங்கள் சீர்கெட்ட சமுதாயத்தை நல்லதொரு 'வளமிக்க' சமுதாயமாக்க — நல்லதொரு கருத்துக்களை மக்களிடை விளக்கியும், பரப்பியும், சமுதாயம் நல்ல முறையில் இயங்கவும் பாடுபட்டு வருகிறோம்.

"நாங்கள் உண்மை, நேர்மை முதலியவற்றிற்கு விரோதிகள் அல்ல. 'இவர்கள் நாட்டைக் கெடுக்க வந்தவர்கள்—நாத்திகர்கள்' என்று எங்களைப் பற்றி எண்ணுகின்ற வைதீகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்—எங்களுக்கும் ஆண்டவனுக்கும் எந்தவிதமான தகராறும் கிடையாது என்பதை!

"கோயில்களை இடிக்க வேண்டுமென்று நாங்கள் கூறவில்லை; அவைகள் கண்காட்சிப் பொருட்களாக இருக்க வேண்டியவை; அவைகளின் கலைத் தன்மையைக் கண்டு ரசிக்கலாம்—ஆனால், உலகவியலுக்கு அவைகள் பயனில்லை; அக்கோயில்களில் உள்ள கடவுளின் மீது உருவமற்ற முறையில், இரண்டு மூன்று பவுண்டு அழுக்கேறி உள்ளது; அவைகளை அகற்றி—உலகத்து மக்களுக்கு தமிழ் நாட்டுத் தச்சர்கள் உருவாக்கிய கலைக் காட்சியைக் காண்பிக்கலாம் — நாமும் ரசிக்கலாம்; கோயில்களிலே எணியும் புழுவையும் தூசியையும் அகற்றி, சுத்தமாக வைத்து, மாணவர்களுக்கு அவற்றை, வரலாற்றுச் சாதனங்கள் சம்பந்தமாகக் காண்பிக்கலாம் என்றுதான் கூறுகிறோம்.

"உலகில் உள்ள ஒவ்வொரு கண்காட்சிசாலையிலும் நமது கடவுள்கள் உள்ளன. கோவை தொழிலதிபர் திரு. ஜி. டி. நாயுடு, சான்பிரான்சிஸ்கோவில் உள்ள கண்காட்சியில், நமது நாட்டு கடவுள் சிலை இருக்கக் கண்டாராம். அதில், 'தென்னாட்டிலிருந்து அர்ச்சகர்கள் இலஞ்சம் வாங்கிக்கொண்டு கள்ளிக்கோட்டை துறைமுக வழியாக அச்சிலை ஏற்றுமதி செய்யப்பட்டது' என்று பொறிக்கப்பட்டிருந்ததாம்.

"எனவேதான் நாம் கேட்கிறோம்—'கோயில்களை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்து' என்றால், 'நாங்கள் நாத்திகர்'களா?' என்று.

"ஒரு சிட்டை விபூதி, வியாதியைத் தடுக்கின்றது என்றால், நாட்டில் இத்தனை ஆஸ்பத்திரிகளும், டாக்டர்களும், மருத்துவக் கல்லூரிகளும் ஏன்? சோதிடத்தினால் உண்மை தெரிகிறது என்றால் இத்தனை கோர்ட்டுகளும், நீதிபதிகளும், சப்-மாஜிஸ்திரேட்களும் ஏன்?

"'சண்முகம் பட்டணம் பொடி' என்று விளம்பரம் செய்யப்படுகிறது. எந்த சண்முகத்தை நாங்கள் வணங்குகின்றனரோ, அந்த சண்முகத்தின் பெயர் விளம்பரப் பெயராக்கப்படுவது குறித்து, எந்த பக்தனாவது—வைதீகனாவது ஆத்திரப்படுகின்றனரா? இதுபோலத்தான் 'விநாயகர் சுருட்டு,' 'பிரும்மா புகையிலை' என்ற வகையில், அவர்களுடைய கடவுளர்கள் புகையிலைக்கும்—சுருட்டுக்கும் விளம்பரப் பொருளாக இருக்கும்பொழுது, இதைச் சுட்டிக்காட்டும் எங்கள் மீது ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? 'இராம விலாஸ் புகையிலை' என்று விழுப்புரத்தில் விளம்பரமிருக்கும்போது, தோழர் எம். ஆர். இராதாவின் 'இராமாயணத்'தின் மீது வெறுப்படைவானேன்?

(4-ம் பக்கம் பார்க்க)

'அடிப்படை கல்நாட்டுவிழா'வில் ஏற்பட்ட 'அனர்த்தம்'

'எட்டி உதைத்துவிட்டு தொட்டுக் கும்பிடுகிறது' ஊராட்சி மன்றம்!

இராமேசுவரம், ஜூலை 7—

சென்ற வாரத்தில் இங்குள்ள உயர்நிலைப் பள்ளி ஒன்றுக்கு அடிப்படைக் கல் நாட்டு விழா ஒன்றின்போது, 'அடிப்படைக் கல்லை நாட்டுவது யார்' என்பதில் ஏற்பட்ட தகராறின் காரணமாக, மேற்படி விழா மேற்கொண்டு நடைபெறவொட்டாமல் தடுக்கப்பட்டது என்று செய்தி ஒன்று வெளிவந்ததல்லவா?

தற்போது இராமேசுவரம் பஞ்சாயத்துக் குழுவினர் சென்ற 28-ந் தேதியன்று கூடி, தீர்மானம் ஒன்று நிறைவேற்றி, அதில் அவ்விழா நடைபெறாமைக்கான காரணம் காட்டியிருக்கின்றனர்.

அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

"இந்தப் பஞ்சாயத்தின் குழு, அடிப்படைக் கல் நாட்டுவதற்கு யாரையுமே 'அதிகார பூர்வ'மாக அழைக்கவில்லை; மாவட்டக் கழகத் தலைவரின் கருத்துப்படி அமைச்சர் பக்தவத்சலனாரைக் கொண்டே நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது

"ஆனால் ஒரு சிலர் சண்முக இராஜேஸ்வர சேதுபதியைத்தான் அழைக்க வேண்டுமென்று கோரினர்; ஆனால், இது சம்மந்தமாக மாவட்டக் கழகத் தலைவரைக் கேட்டபோது, திரு பக்தவத்சலனாரைக் கொண்டே கல்நாட்டு விழாவை நடத்துவதென்றும், கட்டிடத் திறப்பு விழாவிற்கு திரு. சேதுபதியை அழைப்பது என்றும் தெரிவித்ததின் பேரில், விழவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

"'கடைசி நேரத்தில், விழாவை எப்படியும் நிறுத்த வேண்டும்' என்ற எண்ணங்கொண்ட சிலர், அடிப்படைக் கல்லில் பஞ்சாயத்தின் பெயர் இருக்கக்கூடாதென்றும், நிலம் வழங்கிய சேதுபதி அவர்களின் பெயர்தான் பொறிக்கப்படவேண்டும் என்றும், அப்படி செய்யாவிட்டால் விழா நிறுத்தப்படுமென்றும் கூறினார்கள்.

"சாதாரணமாக, அடிப்படைக் கல்லில் நன்கொடையாளர்களின் பெயர் பொறிக்கப்படுவதில்லையாதலால், பள்ளிக்கு நிலம் தந்த சேதுபதி, பள்ளிக்கென ரூ. 25 ஆயிரம் கொடுத்த ராம்னாத் கஸ்தூர் சந்த் டாக்கா ஆகியோரின் பெயர்களை தனித்தனியே கல்லில் பொறித்து வைக்க வேண்டுமெனவும் பதில் கூறப்பட்டது. மேலும், ஆரம்ப காலத்திலிருந்தே மேற்படி பள்ளியை நிறுவ பஞ்சாயத்துக் குழு முயற்சியெடுத்துக்கொண்டு வந்துள்ளதால் அதன் பெயரையே கல்லில் செதுக்குவதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இதுபற்றிய ஆட்சேபணைகளெல்லாம், 'விழாவை நடத்தவிடக் கூடாது' என்ற குறுகிய நோக்கத்துடனேயே இறுதிக் கட்டத்தில் கிளப்பிவிடப்பட்டது. இறுதியில் விழாவையும், வற்புறுத்தும் போக்கில் நிறுத்தியும் விட்டனர். இவ்வாறு எதிர்பாராதவிதமாக மேற்படி விழா நடைபெற முடியாமல் நிறுத்தப்பட்டதற்காக பஞ்சாயத்து தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது."

உயர்நிலைப் பள்ளிக்கான நிலம் பஞ்சாயத்தின் பெயருக்கு வழங்கப்பட்டாலொழிய, மேற்கொண்டு கட்டிட வேலையை ஆரம்பிப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், உடனடியாகப் பள்ளிக்கான நிலத்தை இப்பஞ்சாயத்தின் பெயருக்கு வழங்க வேண்டுமென்று அமைச்சர் சண்முக இராஜேசுவர சேதுபதியைக் கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

விற்பனை வரியையும் மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமாம்!

வரிக் குழு சிபாரிசை விவாதிக்க சென்னை மந்திரிசபை கூடுகிறது!

சென்னை, ஜூலை 11—

விற்பனை வரி பிரச்சினை சம்பந்தமாக, வரி விசாரணைக் குழு செய்துள்ள சில சிபாரிசுகளை பரிசீலனை செய்வதற்காக வருகிற 14-ந் தேதியன்று, சென்னை மாகில நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் தலைமையில் பரிசீலனைக் கூட்டம் ஒன்று நடைபெறும் என்றும், அக் கூட்டத்தில் மற்ற மந்திரிகளும், சர்க்கார் அதிகாரிகளும், விற்பனை வரி நிபுணர்களும் கலந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரு மாகிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரத்திற்கு விற்பனை வரி விதிப்பதை இந்திய சர்க்கார் நிர்வாகத்திற்கு மாற்றிக்கொண்டு, அதனால் கிடைக்கும் வருமானத்தை அந்தந்த மாகிலங்களுக்கு வருமான வரிபோல் பகிர்ந்து கொடுக்கலாம் என்றும் மேற்படி வரி விசாரணைக் குழு சிபாரிசு செய்திருந்தது.

இது தவிர, பஞ்சு, சணல், தோல் போன்ற சில பொருட்களுக்கு விற்பனை வரி விதிக்கும் அதிகாரத்தை இந்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளலாம் என்று, மேற்படி குழு சிபாரிசு செய்தது.

மேற்படி முடிவுகளை பரிசீலிக்கவே இக்கூட்டம் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

ஏழை மாணவர்களுக்கு கல்விச் சலுகை

'நற்சான்று' வழங்க மேலும் பலருக்கு அதிகாரம்

சென்னை, ஜூலை 10—

ஏழை மாணவர்களுக்குக் கல்விச் சலுகை அளிப்பது சம்பந்தமாக, மாணவர்களின் பெற்றோர், அல்லது பாதுகாப்பாளரின் நிதி நிலைமை குறித்து நன்ருகத் தெரிந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அவர்களது வருட வருமான அத்தாட்சிப் பத்திரம் வழங்கலாமென சென்னை சர்க்கார் அதிகாரம் வழங்கியிருக்கிறது.

சென்னை மாகிலத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகில சட்டசபை, மேல்சபை உறுப்பினர்கள், நகர மன்ற உறுப்பினர்கள் மாவட்டக் கழக உறுப்பினர்கள், எல்லா பிரிவுகளையும் சேர்ந்த கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் ஆகியோரும், சர்க்கார் உத்தரவுப்படி இனிமேல் மேற்கண்ட அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குவதற்குரிய அதிகாரம் பெறுகின்றனர்.

சர்க்கார் குறிப்பிட்டுள்ள நமூனுபடி, அந்த அத்தாட்சிப் பத்திரங்களில் 'கர்ணம்' அல்லது கிராம அதிகாரியின் கையொப்பம் தேவையில்லை.

ஆனுல் அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் மேற்படி நபர்கள், 'எனக்கு நன்ருகத் தெரிந்தவரையில் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரியானவை' என்று கையெழுத்திட்டு வழங்கவேண்டும்.

இந்த உத்தரவுகள் உடனடியாக அமுலுக்கு கொண்டுவரப்படுமென்று, ஆனுல் இது 1955—56-ம் கல்வி ஆண்டில் மட்டும்தான் அமுலிலிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்கச் செய்தி நிறுவன நிருபர்கள் கைது

வியன்ன, ஜூலை 10—

வியன்னவிலுள்ள அமெரிக்க செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு நிருபர்களும், மற்றும் இரண்டு ஹங்கேரிய நாட்டைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாக, புதாபெஸ்ட் வானுெலிச் செய்தி அறிவித்துள்ளது.

வளரும் இயக்கம்-வழியும் சிறைகள்!

ஒரே நாளில் 551 அகாலி தொண்டர்கள் கைது

அமிருதசரஸ், ஜூலை 11—

பஞ்சாப் மொழிவழி மாகிலக் கோரிக்கை ஒலி முழக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவை எதிர்த்து அகாலி தளத்தவர் நடத்திவரும் கிளர்ச்சியை யொட்டி, இன்று மொழிவழி மாகிலக் கோரிக்கை ஒலி முழக்கம் செய்ததாக 551 அகாலித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அம்பாலாவில் 22 பேர்கைது

அம்பாலா, ஜூலை 11—

அமிர்தசரசில் நடைபெறும் அகாலியர் கிளர்ச்சியில் கலந்துகொள்ள சர்தார் ஜஸ்வந்த் வீர் சிங் தலைமையில் சென்ற 17 அகாலி தொண்டர்கள், அம்பாலாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனுல் அம்பாலாநகரில், மொழி வழி கோரிக்கைக்கான ஒலி முழக்கங்களுக்கு எவ்விதத் தடையும் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

கைது செய்யப்பட்டவர்கள் நீங்கலாக, 16 பெண்கள் உள்பட 33 தொண்டர்கள் அமிர்தசரசுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி 33 தொண்டர்களையும் பின்பற்றிச் சென்ற சுமார் 3 000 பேர், மொழிவழி மாகிலக் கோரிக்கை ஒலிகளை முழக்கிக் கொண்டு அம்பாலா நகர இரயில் நிலையம் வரை பின்தொடர்ந்திருக்கின்றனர்.

முதலில் 17 பேரே கைது செய்யப்பட்டிருந்தாலும், மீண்டும் 5 அகாலிகள் கைது செய்யப்பட்டனர் என்றும், ஆக, மொத்தம் 22 அகாலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

கழகக் கூட்டம்

★

பள்ளிப்பாளையம்
(சேலம் மாவட்டம்)
திருச்செங்கோட்டு வீதி
மைதானத்தில்
14—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: ப. சுப்பிரமணியம்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஜூலை 12: வத்தலகுண்டு
15: விருதுநகர்
16: சிந்தாதிரிபேட்டை (சென்னை) மாலை—திருமணம்
17: பெரம்பூர்
21: தருமபுரி
22: செங்குன்றம்
23: நகிரி

தீக்குச்சி பஞ்சமா?

ஒரு தீக்குச்சி தேவைப்பட்டதை யொட்டி, ஒரு நபர், இரயில் பாதையின் நடுவே நின்றுகொண்டு, வேகமாக வந்து கொண்டிருந்த இரயிலை நிறுத்தி, இரயில் எஞ்சினை ஓட்டிச் சென்றவரிடம் தீக்குச்சி கேட்டாராம்!

இந்தச் சம்பவம் ஒண்டேரியோவில், கனுேக் எனுமிடத்திற்கு அருகில் நடைபெற்றிருக்கிறது!

அவரும் செல்வாராம்!

கானடாவின் அயல்நாட்டமைச்சரான லெஸ்டர் பியர்சன் என்பவர், வருகிற செப்டம்பர்—அக்டோபரில் மாஸ்கோவிற்கு வருகை தர இருப்பதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

படித்து வேலையற்றிருப்போர் துயர் துடைக்கத் திட்டமாம்!

13 மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் 2,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவராம்!

செலவில் 75 சதவிகிதத்தை இந்தியப் பேரரசு மானியமாகத் தருமாம்!

சென்னை, ஜூலை 11—

படித்துவிட்டு, வேலையில்லாமல் திண்டாடுகிறவர்களின் தொல்லையைக் குறைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை மாகிலத்தில், 13 மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் அதிகப்படியாக 2000 ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்படுவராம். இவர்களுக்காகும் செலவில் 75 சதவிகிதத்தை இந்திய சர்க்கார் மானியமாகத் தரும் என்றும், ஒவ்வொரு புது பள்ளிக்கும் தேவையான சாதனங்களுக்காக ரூ. 200 தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் ஆரம்பிக்கப்படும் புதுப் பள்ளிகளுக்கும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள ஓராசிரியர் பள்ளிகளில் அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்கவும், ஏற்கனவே உள்ள உயர்தர ஆரம்ப வகுப்புகளில் ஆசிரியர்களை நியமிக்கவும் இத்திட்டம் வழி செய்கிறதாம்.

ஒவ்வொரு மாவட்டக் கழகத்தின் தேவையையும் கவனித்து, அனுமதிக்கப்பட்டுள்ள 2000 ஆசிரியர்களையும் மேற்படி 13 மாவட்டக் கழகப் பள்ளிகளுக்கும் விநியோகிக்குமாறு கல்வி இலாகா டைரெக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

இந்த 2000 பேர், தேவையை நிவர்த்திக்க போதுமானவர்களாக இல்லாமலிருந்தால், மேலும் அதிகப்படியான ஆசிரியர்கள் தேவை—அவர்களுக்கான ஊதிய விவரங்கள் முதலியனவற்றையும் அவர் சர்க்காருக்குத் தெரிவிப்பாராம்

இந்த வேலையை கல்வி இலாகா டைரெக்டர் உடனடியாக மேற்கொள்வார் என்று கூறப்படுகிறது.

போராட்ட வீரர்கள்

நாடு கடத்தப்படுகின்றனர்?

சென்ற வாரத்தில் கோவா இராணுவ நீதி மன்றத்தால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கோவா தேசீயவாதிகள் சிலரை நாடு கடத்தி விடுவதென்று போர்ச்சுகீசிய அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகின்றனராம். அனேகமாக, அண்மையில் இங்கு வரவிருக்கிற கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டு அயல் நாடுகளுக்குக் கடத்தப்படுவர் என்று செய்தி ஒன்று அறிவிக்கிறது.

★

'பொறுமைக்கும் எல்லையுண்டு'

இரங்கூன், ஜூலை 11—

"பொறுமைக்கும் ஒரு அளவுண்டு—எல்லையுண்டு; போர்ச்சுகலின் அவதூறுகளையும், ஆணவப் போக்கையும் எதிர்த்து, சொந்த நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இந்தியா, 'கடைசி நடவடிக்கை'யை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம்."

என்று கோவா பிரச்சினையில் இந்தியாவின் நிலைபற்றி இரங்கூனிலுள்ள ஆங்கில இதழ் ஒன்று எழுதியிருக்கிறது.

அவ்விதழில், 'கோவா நிலைமை மிக நெருக்கடியாகவே இருந்தாலும், சமாதானத்தைத் தேடும் கொள்கையை இந்தியா மாற்றிக்கொள்வது உசிதமல்ல' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

★

'நிச்சயமான கொள்கை' தெரிவிக்கப்படுமாம்!

வருகிற 23-ந் தேதி, புதுடில்லியில் நடைபெறப்போகும் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின்போது, கோவா பிரச்சினை பற்றிக் காங்கிரஸ்காரர்களுக்கு 'நிச்சயமான' கொள்கை தெரிவிக்கப்படுமாம்!

வல்லரசுகள் மாநாடு: நேரு அவநம்பிக்கை?

'கம்யூனிஸ்டு அகிலம்' பற்றி ஒரு குறிப்பு!

"ஜினீவாவில் நடைபெறப் போகும் வல்லரசுகளின் மாநாட்டின் பயனுக எதிர்பாராதவிதத்தில் உடன்பாடுகளோ, அன்றி திட்டங்களோ ஏற்பட்டு விடுமென்று எதிர்பார்க்க முடியாது; ஆனுல், தகராறுகளை, சமாதான முறையில் முடிவு செய்யும்வகையில், சில நடவடிக்கைகள் இம்மாநாட்டின் மூலம் எடுத்துக் கொள்ளப்படலாம்," என்று, பிரதமர் நேரு கூறியுள்ளார்.

"கம்யூனிஸ்டு அகிலத் தலைவர்கள் தங்களுடைய நிறுவனத்தை என்ன செய்யப் போகிறுர்கள் என்று கூறுவது கஷ்டமாகும்; மற்ற நாடுகளில், அந்த நிறுவனம் ஓரளவுதான் வேலை செய்து வருகிறது," என்றும் அவர் கூறினுர்.

போலீஸ் சிப்பந்திகட்குக் குடியிருப்பு வசதி

சென்னை நகரிலும், அதன் மாவட்டங்களிலும் போலீஸ் கீழ்த்தரச் சிப்பந்திகளுக்குக் குடியிருப்பு மனைகள் கட்டுவதற்கு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை வகுக்க சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர். கிடைக்கும் காலி மனைகளை 'பட்டா' செய்யும் நோக்கத்துடன், அவ்விடங்களை 'சர்வே' செய்ய ஓர் குழுவையும் நிறுவியுள்ளனர்.

'வரி'களை தீணிக்கும்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"சீனு, ஒரு காலத்தில், நம் நாட்டைவிட கடவுளர்கள் நிறைந்த நாடாகக் காட்சி அளித்தது; தற்பொழுது அக்கடவுளர்களை, கண்காட்சிச்சாலையில் வைத்துள்ளனர்; அவைகளை இப்போது 'டிரேட் மார்க்'காக பயன்படுத்துகின்றனர். இந்த நிலைமையில்தான், 'அன்பே சமயம்; அறிவே கடவுள்,' என்ற சமுதாயப் பணியிலே ஈடுபட்டுள்ளோம்."

திருமண அன்பளிப்பு

12-6-55 காலை 10½ மணிக்கு, சென்னை — மயிலை, மாதவராவ் தோட்டம், தோழர் ஜி. தனபால் இல்லத்தில், தோழர் ந சுப்பிரமணி—தோழியர் கௌரி அம்மான் கலப்பு மணம், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் வே. வ. வேந்தன், பா. கலைச்செழியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது. வரப்பெற்ருேம்—நன்றி!—பொறுப்பாளர்.

கர்த்தபம் தேய்ந்து கட்டெறும்பாகிறது!

சென்னை அரசின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சரிகிறது?

முன்பு குறித்த தொகை கூடிப்பேசி ஆராய்ந்த பின்பு குறைகிறது!

மேலும் குறையுமென நிதி அமைச்சர் யூகம்!

சென்னை, ஜூலை 10—

சென்னை சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக ரூ. 350 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட பிரரேபணைகளை, இறுதியாக வகுத்துள்ளதாகக் கூறப்படுகிறது

இந்த இறுதிப் பிரரேபணைகள் அனைத்தும் மாகிலத்திலுள்ள மூன்று அமைச்சர்கள் கூடிப்பேசி ஆராய்ந்த பின்னரே வகுக்கப்பட்டுள்ளனவாம்.

சென்னை அமைச்சரவை முதன் முதலில் இப்பிரரேபணைகளை அங்கீகரித்தபின்னர், திட்டக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுமாம்.

தற்போது வகுக்கப்பட்டிருக்கும் இத்திட்டம் முழுவதும் தற்காலிக திட்டமே என்றும், இந்தியா முழுவதற்குமாக வகுக்கப்படும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும், அதில் ஒவ்வொரு மாகிலத்திற்கும் ஒதுக்கப்படும் பங்கையும் பொறுத்து, மாகில சர்க்கார், தங்கள் திட்டத்தைக் குறைத்துக் கொள்வர் என்றும், அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறுர்.

சென்னை சர்க்கார் வகுத்துள்ள இந்த 350 கோடி செலவுள்ள 'தற்காலிக'த் திட்டத்தில், சென்னை மாகிலத்தில் மத்திய சர்க்கார் அமுல் நடத்த இருக்கும் திட்டங்களின் செலவு சேர்க்கப்படவில்லையென்றும், அதுபோலவே, நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டமும் இந்தச் செலவுகளில் சேர்க்கப்படவில்லை என்றும், ஆக, நெய்வேலி, மற்றும் மத்திய சர்க்கார் அமுல் நடத்த எண்ணியிருக்கும் திட்டங்கள் ஆகியவை தவிர்த்து மற்றத் திட்டங்களுக்காகவே இந்த ரூ. 350 கோடி உத்தேசமாக செலவு செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது

முதன் முதலில், சென்னை சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 400 கோடி செலவிட உத்தேசித்திருப்பதாகவும், பின்னர், அத்தொகை, அமைச்சர்களின் பரிசீலனையின் விளைவாக ரூ 350 கோடியாகக் குறையலாயிற்று என்றும், இரண்டாவது திட்டத்திற்குக் கிடைக்கக் கூடிய சாதனங்களைப் பொறுத்து மேலும இத்தொகை குறைக்கப்படலாம என்றும் கூறப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.